**சாவகச்சேரி நகர சபை**

**யாழ்ப்பாணம் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 28 பெப்ரவரி 2020 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 15 யூலை 2020 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 31 ஆகஸ்ட் 2020 ஆந் திகதியும் தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்களில் 2019 திசெம்பர் 31 இல் சாவகச்சேரி நகரசபையின் நிதிநிலைமையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலையை தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

### (அ) நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக பின்பற்றப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை | இனிவரும் காலங்களில் கணக்கீட்டுக் கொள்கைகள் வெளிப்படுத்தப்படும். | நிதிக்கூற்றுக்களை தயாரித்து அளிப்பதற்கான கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |

### (ஆ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | 67 எண்ணிக்கையான ரூபா 2,375,313 ஆன இயந்திரங்கள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட போதும் பௌதீக ரீதியாக காணப்படவில்லை. இதனால் சபையின் நிதிக்கூற்றுக்களில் சொத்துக்களின் பெறுமதி அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது. | இனிவரும் காலங்களில் பதிவழிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை தயவுடன் அறியத்தருகின்றேன். | பௌதீக ரீதியாக காணப்படாத இயந்திரங்களின் பெறுமதியை ஏடுகளில் சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ii) | 23 எண்ணிக்கையான ரூபா 1,687,954 ஆன மோட்டார் வாகனங்கள் நிதிக்கூற்றுக்களில் | இனிவரும் காலங்களில் பதிவழிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் | பௌதீக ரீதியாக காணப்படாத மோட்டார் வாகனங்களின் பெறுமதியை |

| | | | |
|---|---|---|---|
| | காட்டப்பட்ட போதும் இவை பௌதீக ரீதியாக காணப்படவில்லை. இதனால் சபையின் நிதிக்கூற்றுக்களில் சொத்துக்களின் பெறுமதி அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது. | என்பதனை தயவுடன் அறியத்தருகின்றேன். | ஏடுகளில் சீர்செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (iii) | 1,097 எண்ணிக்கையான ரூபா 701,391 ஆன தளபாடங்கள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட போதும் பௌதீக ரீதியாக இவை காணப்படவில்லை. இதனால் சபையில் நிதிக்கூற்றுக்களில் சொத்துக்களின் பெறுமதி அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது. | இனிவரும் காலங்களில் பதிவழிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை தயவுடன் அறியத்தருகின்றேன். | பௌதீக ரீதியாக காணப்படாத தளபாடங்களின் பெறுமதியை ஏடுகளில் சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (iv) | 4,682 எண்ணிக்கையான ரூபா 1,066,181 ஆன நூலகப்புத்தகங்கள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட போதும் இவை பௌதீக ரீதியாக காணப்படவில்லை. இதனால் சபையின் நிதிக்கூற்றுக்களில் சொத்துக்களின் பெறுமதி அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது. | குறித்த புத்தகங்களின் பெறுமதி பதிவழிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. | பௌதீக ரீதியாக காணப்படாத புத்தகங்களின் பெறுமதியை ஏடுகளில் சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

**1.4 இணக்கமின்மைகள்**

**1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) நகர சபை ஒழுங்கு விதி | | | |
| அத்தியாயம் (III) பிரிவு 54 (2) | ஆதனவரி நிலுவை ரூபா 12,021,965 செலுத்தத் தவறியோருக்கு தவிசாளரினால் பற்றாணைச் சீட்டு வழங்கப்பட்டிருக்கவில்லை. | சகல ஆதனங்களிற்குமான பற்றாணைச்சீட்டுக்கள் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | நகர சபை ஒழுங்கு விதிக்கு அமைய ஆதனவரி நிலுவைகள் சம்பந்தமாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் நிதிப்பிரமாணங்கள்

| | | | |
|---|---|---|---|
| இலக்கம் 371 | சபையினால் வழங்கப்பட்ட முற்பணம் ரூபா 19,290 இதுவரை சீர்செய்யப்பட்டிருக்கவில்லை | அறவிட நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிதி ஒழுங்கு விதிக்கமைய முற்பணங்களை சீர்செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| இலக்கம் 571 | 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலங்கடந்த ஒப்பந்ததாரர் பிடிபணம், பாதுகாப்பு வைப்பு பணம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிடிபணத்தை பெற்றுக் கொள்ளுமாறு குறித்த ஒப்பந்ததாரருக்கு கடிதம் வழங்கப்பட்டுள்ளது. | நிதி ஒழுங்கு விதிக்கமைய உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 41,902,170 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 15,145,188 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | 2019 | | | 2018 | | |
|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலமைக்கூற்றின் படி நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலமைக்கூற்றின் படி நிலுவைகள் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 6,735,000 | 7,095,438 | 12,021,965 | 6,936,400 | 7,053,963 | 11,824,334 |
| வாடகைகள் | 23,637,200 | 25,412,400 | 1,019,764 | 14,314,200 | 26,854,257 | 831,479 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 831,000 | 939,291 | 500 | 806,100 | 872,031 | 1,500 |
| ஏனைய வருமானம் | 76,673,056 | 83,701,732 | 9,220,496 | 91,362,000 | 50,776,185 | 9,053,738 |
| | 107,876,256 | 117,148,861 | 22,262,725 | 113,418,700 | 85,556,436 | 21,711,051 |

### 2.2.2 வீதவரி மற்றும் வரி

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் ஆதனவரி நிலுவை ரூபா 12,021,965 அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவைத்தொகை உள்ளடக்கியதாக வரி மதிப்பு அறிவித்தல் படிவம் வழங்கப்படுகிறது. | ஆதனவரி நிலுவைகளை உரிய காலத்தில் அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 2.2.3 வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் கடை வாடகை நிலுவை ரூபா 345,804 இனை அறவிட சபையால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அறவீடு செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | கடை வாடகை நிலுவைகளை உரிய காலத்தில் அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 2.2.4 அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்

#### (அ) தொழில்சார் அனுமதிக்கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் ரூபா 300,000 ஆன தொலைத்தொடர்பு கோபுரங்களிற்கான உரிமங்களினை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உரிமங்களின் நிலுவைகளை உரிய காலத்தில் அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

#### (ஆ) வியாபார அனுமதிப்பத்திரங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டுக்கான விளம்பரப்பலகைக்கான கட்டணங்கள் நிலுவை ரூபா 428,250 இனை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவீடுகள் மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | விளம்பரப்பலகைக் கட்டண நிலுவைகளை உரிய காலத்தில் அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 2.2.5 ஏனைய வருமானங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் ஏனைய வருமானங்களின் நிலுவை ரூபா 11,409 வினை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய நடவடிக்கை எடுக்கப்படும். | ஏனைய வருமான நிலுவைகளை உரிய காலத்தில் அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 2.2.6 முத்திரைக் கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 6,434,683 தொகையான முத்திரைக் கட்டணங்கள் பெறப்பட வேண்டியிருந்தன. | தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | முத்திரைக் கட்டண நிலுவைகளை உரிய காலத்தில் அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

நகர சபை கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

#### (அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நகர சபை கட்டளை சட்டத்தின் 157 ஆம் பிரிவின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 வரையிலும் 15 விடயங்களுக்கும் உப விதிகள் உருவாக்கப்பட்டிருக்கவில்லை. | தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | சட்டத்திற்கமைய உப விதிகள் உருவாக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**(ஆ) திண்மக் கழிவு முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | பிலிசறு திட்டத்தில் உள்ள அரிக்கும் இயந்திரம் பொருத்தப்படாது காணப்படுகின்றது. | பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகின்றது. | இயந்திரம் பொருத்தப்படல் வேண்டும். |
| (ii) | கழிவுப்பொருட்களினை சேகரித்து தரம் பிரிக்கப்பட்டிருந்தும் அவை மீள்சுழற்சிக்குட்படுத்தப்பட வில்லை. | விற்பனை செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | திண்மக்கழிவுகளை மீள் சுழற்சிக்கு உட்படுத்தவற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (iii) | நகர சபையினால் திண்மக்கழிவு பணிகளில் ஈடுபடுத்தப்படும் 30 சுகாதாரத் தொழிலாளர்களும் வருடாந்தம் மேற்கொள்ள வேண்டிய மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்படவில்லை. | இவ்வருடத்திலிருந்து சுகாதாரத் தொழிலாளர்களுக்கான மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுத்திகரிப்பு பணிகளில் ஈடுபடும் தொழிலாளருக்கு மருத்துவ பரிசோதனை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (iv) | நகராட்சி மன்றத்தினால் வழங்கப்பட வேண்டிய அத்தியாவசிய சேவையாகிய மலக்கழிவகற்றல் மேற்கொள்ளப்படாமல் உள்ளமையால். பொதுமக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். | இவ் வேலையை மீள ஆரம்பிப்பது தொடர்பாக யாழ் மாவட்டச் செயலாளர் அவர்களிடம் கோரியுள்ளோம். | அத்தியாவசிய சேவையாகிய மலக்கழிவகற்றலை மேற்கொள்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | நிலையான வைப்பு நிதி ரூபா 73,604,622 நகர அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்படாது வங்கியில் வைப்பிலிடப்பட்டிருந்தது. | சபையினால் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் நமைுமுறைப்படுத்தப்படவுள்ளன. | சபைக்குரிய நிதியினை அபிவிருத்தி தேவைகளுக்கு பயன்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | அனுமதியற்ற கட்டடம் தொடர்பாக சபையினால் நீதி மன்றத்தில் வழக்கு இடம்பெற்று வருவது | 2019 ஆம் வருட இறுதியில் வழக்கிடும் சூழ்நிலைகள் அமையப்பெற்றதன் காரணமாக முற்கூட்டியே | சபையினால் மேற்கொள்ளப்பட்ட வழக்கு தொடர்பாக எதிர்பார்க்கப்படும் |

| | | | |
|---|---|---|---|
| | அவதானிக்கப்பட்டிருந்த போதும் ஏற்படவிருக்கும் பொறுப்புகள் நிகழத்தக்க பொறுப்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை. | நிதியொழுங்கினை ஏற்படுத்த முடியவில்லை. | பெறுமதிகளின் விபரம் நிதிக்கூற்றுகளில் வெளிப்படுத்தப்படல் வேண்டும் |
| (இ) | சபைக்கு எதிராக வழக்குகள் இடம்பெற்று வருகின்ற போதும் செலவுகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை. | வருமான செலவினக் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | மேற்கொள்ளப்பட்ட வழக்கு தொடர்பான செலவுகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |
| (ஈ) | சபைக்கு சொந்தமான 38 கடைகள் 07 தொடக்கம் 40 ஆண்டுகளாக வாடகை ஒப்பந்தம் புதுப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில் லை. | ஒப்பந்தம் புதுப்பிக்காத கடைகள் தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | வாடகை ஒப்பந்தங்களை காலத்திற்கு காலம் புதுப்பிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

**(அ) பதவி வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையானது உரியவாறு மனித வளத்தைப் பெற்று ஈடுபடுத்தாமையினால் அத்தகைய 25 மனிதவளங்களினால் நிறைவேற்றப்பட வேண்டிய சேவைகள் தாமதமடைந்துள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டிருந்தது. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுமதிக்காக கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | பதவி வெற்றிடங்களை உரிய காலத்தினுள் நிரப்புவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**(ஆ) ஊழியர் கடன்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் இறந்த, பதவி வறிதாக்கப்பட்ட 04 அலுவலர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய பதவியினர் கடன் நிலுவை ரூபா 88,478 இனை அறவீடு செய்வதற்கு கடந்த 08 வருடங்களுக்கு மேலாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய நடவடிக்கை எடுக்கப்படுகிறது. | பதவியினர் கடன் நிலுவையினை உரிய காலத்தினுள் அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

### 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சோலைவரி அறவிடுவதற்காக வருடாந்தம் சபையினால் ஆதன உரிமையாளர்களுக்கு K படிவம் வழங்கப்பட வேண்டியபோதிலும் 2019 ஆம் ஆண்டில் 3,197 ஆதனங்களுக்கு K படிவம் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. | ஆதன உரிமையாளர்களை அடையாளம் காண முடியாத சந்தர்ப்பங்களினால் நிலுவையினை அறவிடுவதில் சிரமங்கள் காணப்படுகிறது. | ஆதன வரி நிலுவையினை அறவிடுவதற்காக K படிவங்கள் வழங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.5.1 பராமரிப்பு மற்றும் திருத்தங்களினை மேற்கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| NPJP – 8201, NPJS - 7934, ஆகிய இலக்க வாகனங்கள் பழுதடைந்திருந்தும் சபையினால் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய நடவடிக்கை எடுக்கப்படுகிறது. | வாகனங்களிற்கு பராமரிப்பு மற்றும் திருத்தங்கள் உரிய காலத்தில் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபையின் பாதீட்டு செலவிற்கும் உண்மையான செலவுகளுக்கும் இடையே கணிசத்தன்மையான வேறுபாடு காணப்படுவதனால் இது ஒரு வினைத்திறனற்ற பாதீடாக காணப்படுகின்றது. | பதில் வழங்கப்படவில்லை. | பாதீட்டினை சரியான முறையில் திட்டமிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |